6. நன்றிப் பாடல்

நன்றி என்று பாடுவேன் என் இனிய தேவனே
நன்மை செயல்கள் செய்த உந்தன் அன்பைப் பாடியே (2)
கோடி நன்றி பாட்டுப் பாடுவேன்
காலமெல்லாம் வாழ்த்துக் கூறுவேன் (2)

உயிர்கள் யாவும் வாழ நல் உலகைப் படைத்ததால்
உறவு வாழ்வில் வளர நல் உள்ளம் உறைந்ததால்
நிஜங்கள் யாவும் நிலைக்க நற்செய்தி தந்ததால்
நிழல்கள் துன்பம் மறைய திருவிருந்தை அளித்ததால்

பகிர்ந்து வாழ்வில் வளர நல் மனதைக் கொடுத்ததால்
பரமன் அன்பில் வாழ அருள் வரங்கள் பொழிந்ததால்
பகிர்ந்து வாழும் அன்பு வாழ்வில் என்னைச் சேர்த்ததால்
செபித்து நின்று வேண்டும்போது என்னைக் காப்பதால்
நேசக்கரத்தை நீட்டி வந்து நன்மை செய்வதால்
துன்ப துயரைப் பனியைப் போல விலக வைப்பதால்
உண்மை அன்பில் உள்ளம் மகிழத் தந்ததால்
உந்தன் ஒளியே உலகில் எந்தன் வழியாய் ஆனதால்

7.மாதா பாடல்கள்

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்கு அடைக்கலமே

இறைவன் படைத்த எழிலே
இயேசுவைத்தந்த முகிலே
தூய்மை பொழியும் நிலவே
திணையே வாழ்வில் நீயே

புவியோர் எங்கள் புகழே
புனிதம் பொங்கும் அழகே
உம்மகன் புதிய உறவில்
எம்மையும் வதியச் செய்வாய்

மாதாந்த திருப்பலிப்
பாடல்கள் செப்டெம்பர்

1.வருகைப் பாடல்

இறைவன்நம்மைஅழைக்கின்றாரே
விரைந்து வாருங்கள்
புதிய உலகம் படைத்திடவே
மகிழ்ந்து கூடுங்கள்
இறைவன் அரசு வளர்ந்திடவே
இறைவார்த்தை வழங்கிடவே -2
இனிதே இணைந்தே சென்றிடுவோம்

தாயின் கருவினிலே
நம்மைத் தெரிந்தெடுத்தார்
அவரின் கைகளிலே நம்
பெயரைப் பொறித்து வைத்தார் (2)
அவரில் நம்மை அர்ப்பணம் செய்ய
மனித மாண்பு மண்ணில் உயர (2)
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

அன்புப் பணியினிலே
இறைவனின் சொல்லிலே
ஏழை மனிதரிலே
இயேசுவைக் காணவே (2)
உண்மை நீதி நேர்மை நிலைக்க
பொய்மை சாதி வன்மை அழிக்க (2)
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

2.தியானப் பாடல்கள்

அனைத்தையும் படைத்த
தந்தையின் அன்பே
நமக்குத்துணை நமக்குத்துணை
அன்பும் உண்மையும் ஆகிய அவரே -
நமக்குத்துணை-2
கண்மணிபோல் நம்மைக் காக்கும் அவரே -
நமக்குத்துணை-2
கலங்காதே என்று தேற்றும் அவரே -
நமக்குத்துணை- 2
அவர் வாழுகின்ற தந்தை
நிறைவாஞ்சையான நம் தந்தை -2

யாவையும் காக்கும் மாண்புயர் தெய்வம் -
நமக்குத்துணை-2
காலங்கள் தோறும் வாழ்ந்திடும் தெய்வம் -
நமக்குத்துணை-2
வாழ்வினைக் காட்டும் வழியும் அவரே -
நமக்குத்துணை-2
வறுமையைப் போக்கும் வளமையும் அவரே -
நமக்குத்துணை-2
(அவர் வாழுகின்ற தந்தை) - 2

நீதியைக் காக்கும் நேரிய தெய்வம் -
நமக்குத்துணை-2
மேதினில்யாவையும் மீட்கின்ற தெய்வம் -
நமக்குத்துணை-2
ஆயிரம் வழிகளில் அருகினில் இருப்பார் -
நமக்குத்துணை-2
அல்லல்கள் நீக்கி அரவணைத்திடுவார் -
நமக்குத்துணை-2
(அவர் வாழுகின்ற தந்தை) -2

3.காணிக்கைப் பாடல்

நானே ஒரு காணிக்கைப் பொருளாய்
இறைவா உம் திருப்பலிப் பீடம் வந்தேன் -2 (2)

மலராக என் நெஞ்சம் கனியாக என் கண்கள்
நெல்மணியாய் நான் சிந்தும் வியர்வைத்துளி (2)
திராட்சை இரசமாக என் கண்ணீர்
அப்பமாக என் ஜீவன்
உடல் தாங்கி நானே வந்தேன் (2)

இசையாக ஆசைகள் இயலாக எண்ணங்கள்
கலையாக நான் கற்றப் பாடங்களே (2)
புது ஒளியாக உம் வார்த்தை இருளாக என் வாழ்க்கை
எனை நானே தந்தேனய்யா (2)

4.பரலோக மந்திரம்

பரலோகத்தில் இருக்கின்ற
எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
உம்முடைய இராச்சியம் வருக
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக

எங்கள் அனுதின உணவை
எங்களுக்கின்று அளித்தருளும்
எங்களுக்குத் தீமை செய்தோரை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களை பொறுத்தருளும் -
எங்களை சோதனையில்
விழ விடாதேயும்தீமையினின்று
எங்களை இரட்சித்தருளும்

5. திருவிருந்துப் பாடல்

எந்தன் சொந்தமே இயேசுவே
எந்தன் நெஞ்சிலே வாருமே
உன்னில் மகிழ்ந்து வாழ
உன்னை எனக்குத் தாராய்
எந்தன் சொல்லும் செயலும்
உந்தன் உணர்வில் ஓங்குமே (2)
எந்தன் சொந்தமே இயேசுவே

சுமைகளால் வாழ்வை நான் வெறுத்திடும் போது
சுகமாய் வாழ எழுந்தென்னில் வா (2)
எனக்காய் நின் வாழ்வை வெறுமையாக்கினீர் - 2
என்னையும் பிறர் அன்பில் வாழச் செய்குவாய்

சிங்கார வாழ்வின் சிகரத்தில் இருந்தாலும்
என் நெஞ்சிலே நீ இல்லையேல் (2)
சரிந்தே வீழும் வாழ்வின் செல்வங்கள் - 2
இதனையே உணர்ந்தே நான் வாழ விழைகிறேன்